# செய்தி மடல்

(சென்னை கொங்கு நண்பர்கள் சங்க வெளியீடு)

திருவள்ளுவர் ஆண்டு 2042 (மார்கழி–தை) ஜனவரி 2012 ஏர்-27, உழவு-01, விலை ரூ.10.00

ஆசிரியர், வெளியிடுபவர் :
பரணி கே.பாலசுப்பிரமணி
"வெள்ளி விழா இல்லம்"
34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
போன் : 28351244 / 28352744
செல் : 9381545452

## கொங்கு நண்பர்கள் சங்கம்

"தீரன் சின்னமலை மாளிகை"
72, பீட்டர்ஸ் சாலை,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.
Ph : 28351744
Cell : 93821 55581

"கொங்கு நாடு இல்லம்"
27, அம்மையப்பன் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014
Ph : 28350432 /
Fax : 044-28351244

தலைவர் : பரணி கே.பாலசுப்பிரமணி
துணைத்தலைவர்கள் : கே.ஏ.கணபதி, பி.சென்னியப்பன்
செயலாளர் : ஆர். செல்வராஜ்
இணைச்செயலாளர்கள் : எஸ்.ஆர்.இராஜேந்திரன், Dr.கே.ஆர்.பி.சண்முகம்
பொருளாளர் : கே.கே. ரமேஷ்
தணிக்கையாளர் : ஆர். பாலச்சந்திரன்

செயற்குழு உறுப்பினர்கள் :

| | |
|---|---|
| கே.ராஜாமணி | பி.அருள் |
| வி.பி.செங்கோட்டுவேல் | எம்.எஸ்.சங்மேஸ்வரன் |
| பி.கே.ஈஸ்வரமூர்த்தி | வீ.ஆர்.பாலசுப்பிரமணியன் |
| ஆர். சண்முகவேல் | எம்.அமராபதி |
| எம். கார்த்திக் | எஸ்.அன்பழகன் |
| வி.பி.வீரப்பன் | சி.சர்வராஜன் |
| ஆர்.இளங்கோ | எம்.எஸ்.ராஜேந்திரன் |
| பி.ரவி | கே.என்.தர்மராஜ் |
| Dr.டி.எஸ்.செல்வராஜ் | Dr.மணிமேகலை புஷ்பராஜ் |
| எஸ்.சிவசாமி | உத்தமிபொன்னுசாமி |

## இந்த இதழில்


| | |
|---|---|
| பொருளடக்கம் | - 1 |
| தலையங்கம் | - 2 |
| கட்டிட நிதி | - 3 |
| வேண்டுகோள் | – 4 |
| அடையாள அட்டை விண்ணப்பம் | – 5 |
| பாராட்டு விழா | – 6 |
| மலர் வெளியீடு | – 7 |
| குழந்தை வளர்ப்பு | – 9 |
| மருத்துவத்தின் சிறப்பு | – 12 |
| பெரும் புலவர் | - 15 |
| மணமகன் தேவை | - 16 |
| அறக்கட்டளை | - 17 |
| உடல் இளைக்க உணவு | - 19 |
| விளையாட்டு விழா | - 20 |
| கவிதை | - 22 |
| கட்டுரை | - 23 |
| திருவிளையாடல் | - 24 |
| மணமகள் தேவை | - 26 |
| மணமகள் தேவை | - 27 |
| மணமகன் தேவை | - 31 |


### ஆசிரியர் குறிப்பு

வாசகர்களிடமிருந்து கதை / கவிதை / கட்டுரை / செய்தி மடல் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு. கட்டுரை இன முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இருந்தால் சாலச்சிறந்தது. வரும் கதை, கட்டுரை முதலியவற்றை வெளியிடுவதோ அல்லது சுருக்குவதோ ஆசிரியருக்கு முழு உரிமை.

# தலையங்கம்

அன்பு சொந்தங்களுக்கு, வணக்கம்.



2011 ஆம் ஆண்டு நிறைவுக்கு வந்து, 2012 ஆம் ஆண்டு பிறந்துள்ளது. உங்கள் அனைவருக்கும் ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துகளையும், இனிய பொங்கல் நல் வாழ்த்துகளையும் முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

'வான் மழை துளித்துளியாய் வையத்தில் வந்து விழுமுன் உழவுக்கும் மிஞ்சாது என்றறிந்தும் தாழ்வு வரலாகாதென உயிர் காக்கும் பயிர்த் தொழிலை ஊன் உறக்கம் பாராது போற்றிச் செய்யும் உழவர்குடிப் பெருமக்கள் உற்சாகமாகக் கொண்டாட வேண்டிய திருநாள் பொங்கல் திருநாள். ஆனால் இன்றைக்கு தமிழக விவசாயிகள் படும் துன்பங்களும் துயரங்களும் சொல்லிமாளாது.

விவசாயத்திற்கு அடிப்படைத் தேவை தண்ணீர். கர்நாடக மாநிலம் காவிரியில் தமிழகத்திற்குத் தண்ணீர் திறந்துவிடுவதில் காட்டிவரும் நியாயமற்ற போக்கும், நடவடிக்கையும் தொடர்ந்து நீடித்து வருகின்றன. முல்லைப் பெரியாறு அணையிலிருந்து தமிழகத்தின் தென்மாநிலங்களுக்கு வருகின்ற தண்ணீரைத் தடுத்து நிறுத்திவிட, கேரள அரசு பல வகையிலும் முயற்சி செய்து வருகிறது. உச்சநீதிமன்ற ஆணையைச் சிறிதும் மதிக்காமல் கேரள அரசு தற்போதுள்ள அணையை இடித்துவிட்டு, புதிய அணை கட்ட முயற்சிப்பதன் மூலம் தமிழகத்திற்குத் தற்போது வருகின்ற நீரைத் தடுத்துவிட வஞ்சகமாகத் திட்டமிட்டுள்ளது. இது தமிழக விவசாயிகளுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். காவிரி, பவானி, நொய்யல் போன்ற ஆறுகளின் நீரும் தொழிற்சாலைகள், சாயப்பட்டறைகள் போன்றவைகளின் கழிவுகளால் பெரிதும் மாசுபட்டு, விவசாயத்திற்குப் பெருங்கேடாக அமைந்துள்ளது.

மக்கள் தொகை அதிகரித்துக் கொண்டே வருகிறது. ஆனால் விவசாய நிலங்களின் அளவு சாலைகள், வீடுகள், தொழிற்சாலைகள் முதலியனவற்றால் குறைந்துகொண்டே வருகிறது. இருக்கும் நிலங்களும் நீர்ப் பற்றாக்குறையாலும், மாசுபட்ட நீராலும் விவசாயத்திற்கு ஏற்றவையாக இருக்கும் நிலையை படிப்படியாக இழந்து வருகிறது. இது பெரும் பிரச்சனையாக மாறும் முன்பே அரசு தேவையான நடவடிக்கைகளை உடனே எடுக்க வேண்டும் என்று சங்கத்தின் சார்பாக பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

விவசாய வேலை செய்ய ஆட்கள் பற்றாக்குறை, கடும் மின்வெட்டு, உரவிலை உயர்வு, போதிய கொள்முதல் விலை கிடைக்காமை, இயற்கைச் சீரழிவுகள் போன்றவைகள் விவசாயிகளை படாதபாடு படுத்திக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் விவசாயிகளின் பொருளாதார நிலையும், வாழ்க்கைத்தரமும் பரிதாபகரமான நிலையில் உள்ளது. இந்நிலை மாறிட அரசுகள் எடுத்துவரும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு கொடுப்பதும், லஞ்சத்தை ஒழிப்பதும், இடைத்தரகர்களின் நியாயமற்ற இலாபத்தைக் குறைப்பதும், விவசாயத்திற்கு முன்னுரிமை கொடுத்திட அரசை வலியுறுத்துவதும் இன்றைய காலத்தின் கட்டாயமாகும். ''தை பிறந்தால் வழிபிறக்கும்'' என்ற முன்னோர் முதுமொழிக்கேற்ப, இப்புத்தாண்டில் விவசாயிகளுக்கு நல்வழி பிறக்கட்டும். விவசாயிகளின் வேதனைக் குரல் மகிழ்ச்சிக் குரலாக மாறட்டும். விவசாயிகளின் வாழ்வு வளம் பெறவும், அதனால் நாடு செழித்திடவும் வழிபிறக்கட்டும். கொங்கு மக்கள் அனைவருக்கும் மீண்டும் எனது இனிய பொங்கல் நல்வாழ்த்துகள்.

நன்றி.

பரணி கே. பாலசுப்பிரமணி
தலைவர்

❖❖❖❖❖

# கொங்கு நண்பர்கள் சங்கம்

கட்டிட நிதிக்கு நன்கொடை அளித்தவர்கள் (சென்ற இதழ் தொடர்ச்சி)

| வ.எண். | உ.எண். | பெயர் | தொகை ரூபாய் |
|---|---|---|---|
| | | சென்ற இதழ் வரை மொத்த தொகை | 70,07,284 |
| 1472 | | A.கந்தசாமி | 2,000 |
| 1473 | | கே.ராஜேந்திரன் | 1,050 |
| 1474 | | V.S.சங்கர் | 1,001 |
| 1475 | | C.P.சுப்பண்ணன் | 1,000 |
| 1476 | | K.செல்வராஜ் | 1,000 |
| 1477 | | J.இளங்கோவன் | 1,000 |
| 1478 | | R.அருணா | 1,000 |
| 1479 | | S.தினேஷ்பாபு | 1,000 |
| 1480 | | K.E.ஹேமப்பிரியா | 1,000 |
| 1481 | | M.திலகம் | 1,000 |
| 1482 | | திவ்யா | 1,000 |
| 1483 | | அருண்குமார் | 1,000 |
| 1484 | | P.தேவராஜ் | 1,000 |
| 1485 | | N.ராஜீ | 1,000 |
| 1486 | | T.ரேவதி | 1,000 |
| 1487 | | B.புவனேஸ்வரி | 1,000 |
| 1488 | | சரண்யா | 1,000 |
| 1489 | | கிருத்திகா | 1,000 |
| 1490 | | பிரதீப் | 1,000 |
| 1491 | | P.S.கார்த்திகேயன் | 1,000 |
| 1492 | | கேசவ மூர்த்தி | 1,000 |
| 1493 | | S.திருச்செல்வம் | 1,000 |
| 1494 | | K.K.கருப்பண்ணன் | 1,000 |
| 1495 | | தருண்நவீன் | 1,000 |
| 1496 | | S.ராஜேஷ்குமார் | 1,000 |
| 1497 | | ஸ்நேகா | 1,000 |
| | | மொத்தம் | 70,34,335 |

## உறுப்பினர்களுக்கு அன்பான வேண்டுகோள்

சென்னை கொங்கு நண்பர்கள் சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் புதியதாக அடையாள அட்டை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்று ஏற்கனவே செய்தி மடல் வாயிலாக அறிவிக்கப்பட்டுள்ளது. செய்தி மடலில் வெளியிடப்பட்டுள்ள அடையாள அட்டை மாதிரி விண்ணப்பத்தில் தேவையான தகவல்களைப் பூர்த்தி செய்து, இதுவரை சங்கத்திற்கு அனுப்பாதவர்கள், உடனே அனுப்பும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

சங்கத்தின் தேர்தல்களில் வாக்களிப்பதற்கும், சங்கம் அளித்து வரும் சலுகைகளைப் பெறுவதற்கும் புதியதாக வழங்கப்படவுள்ள அடையாள அட்டை அவசியம் தேவைப்படும். எனவே இதுவரை விண்ணப்பத்தை அனுப்பாத உறுப்பினர்கள் உடனே அனுப்பும்படி வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள்.

'தீரன் சின்னமலை மாளிகை' கட்டிட நிதிக்கு இதுவரை ரூ. 1000/– அனுப்பாத சங்க உறுப்பினர்கள், உடனே அனுப்பிட அன்புடன் வேண்டுகிறோம். ரூ.1000/– அனுப்பாத சங்க உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்குவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படும் என்பதால், கட்டிட நிதியை உடனே சங்கத்திற்கு அனுப்பிடுமாறு வலியுறுத்திக்கேட்டுகொள்கிறோம்.

❖❖❖❖❖

## சங்கச் செய்தி

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் இணையதள முகவரி மாற்றப்பட்டுள்ளது.

www.kongunanbargalsangam.com

உறுப்பினர்கள் இனிமேல் புதிய இணையதளத்தைப் பயன்படுத்தி சங்கச் செய்திகளை அறிந்துகொள்ள வேண்டுமென அன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

பரணி **கே. பாலசுப்பிரமணி**
தலைவர்

**ஆர். செல்வராஜ்**
செயலாளர்

❖❖❖❖❖

அடையாள அட்டை விண்ணப்பம்

# கொங்கு நண்பர்கள் சங்கம்

**வெள்ளி விழா இல்லம்**
நெ.34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை – 600 014.

Membership No. / உறுப்பினர் எண் :

Name / பெயர் :

Father's Name / தகப்பனார் பெயர் :

Date of Birth / பிறந்த தேதி :

Edu. Qualification / கல்வித்தகுதி :

Occupation / தொழில் :

Koottam & Kula Deivam
கூட்டம் & குல தெய்வம் :

Photo

| Native Address<br>சொந்த ஊர் முகவரி | Present Address<br>தற்போதைய முகவரி | Office Address<br>அலுவலக முகவரி |
|---|---|---|
| Ph : | Ph : | Ph : |

Cell Number: E-mail ID :

Family Details / குடும்ப விவரம்

| Name<br>உறுப்பினர் பெயர் | Date of Birth<br>பிறந்த தேதி | Relationship<br>உறவுமுறை | Education / Employment<br>படிப்பு / தொழில் | Blood Group<br>இரத்தப் பிரிவு | Land Line / Mobile<br>தொலைபேசி/கைபேசி |
|---|---|---|---|---|---|
| | | | | | |

குறிப்பு : தங்களைப் பற்றி மேலும் விபரங்களைத் தெரிவிக்க விரும்பினால் அவற்றை இத்துடன் இணைத்து அனுப்பவும்.

Signature
கையொப்பம்

## பாராட்டு விழா



கொழும்பு பன்னாட்டு திறந்த வெளிப் பல்கலைக் கழகம் NSIT திரு. எம். முருகேசன் அவர்களுக்கு டாக்டர் பட்டம் வழங்கியதையொட்டி சென்னை லீ ராயல் மெரிடியன் ஹோட்டல் தலைவர் கொங்கு மாமணி டாக்டர் பழனி ஜி. பெரியசாமி அவர்கள் 12.12.2011 அன்று மாலை ஹோட்டல் வளாகத்தில் பாராட்டு விழா நடத்திச் சிறப்பித்தார். விழாவையொட்டி சிறப்பான விருந்து அனைவருக்கும் வழங்கப்பட்டது.

சவீதா பல்கலைக் கழக வேந்தர் டாக்டர் என்.எம். வீரையன் விழாவில் உரையாற்றும் போது, திரு. முருகேசன் அவர்களுக்கு டாக்டர் பட்டம் வழங்க சவீதா பல்கலைக் கழகம் நினைத்த வேளையில் வெளிநாட்டுப் பல்கலைக் கழகம் முந்திக் கொண்டுவிட்டதாகக் குறிப்பிட்டார். தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பன் அவர்கள் பேசும்போது நாமக்கல் மாவட்டத்தில் உழைப்பால் உயர்ந்து சாதனைகள் படைத்த டாக்டர் PG பெரியசாமி அவர்கள், சாதனைகள் படைத்த மற்றொருவருக்குப் பாராட்டு விழா நடத்துவது மிகவும் போற்றத்தக்கதும் பெருமைபடத்தக்கதுமாகும் எனக் குறிப்பிட்டார். பொறிஞர் நா.சோமசுந்தரம், அமெரிக்க நாட்டுப் பொறிஞர் டாக்டர் காரீசன் முதலானோர் பாராட்டுரை வழங்கினர்.

திரு. முருகேசன் – திருமதி தனம் முருகேசன் தம்பதியருக்கு விழாவிற்கு வந்திருந்த அனைவரும் வாழ்த்துத் தெரிவித்தனர். விழாவிற்கான ஏற்பாடுகளை திருமதி விசாலாட்சி பெரியசாமி, திரு. சென்னிமலை, திரு.செ.கொங்குவேல் ஆகியோர் சிறப்பாகச் செய்திருந்தனர். ஏற்புரையாற்றிய திரு. முருகேசன், டாக்டர் பழனி ஜி. பெரியசாமி அவர்களின் சாதனைகளைப் பாராட்டியதோடு, நன்றியையும் தெரிவித்துக் கொண்டார். இந்த டாக்டர் பட்டம் தன்னுடைய அனைத்து குடும்பத்தினர் மற்றும் நிறுவனங்களின் பணியாளர்கள் ஆகியோரின் ஒட்டுமொத்த உழைப்பிற்கும், சாதனைகளுக்கும் கிடைத்ததாகவே எண்ணுகிறேன் என்றும் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖

## 'விதையின் கதை' நூல் மற்றும் மணிவிழா மலர் வெளியீடு



சக்தி மசாலா நிறுவனங்களின் நிறுவனர் திரு. பி.சி.துரைசாமி, இயக்குநர் திருமதி சாந்தி துரைசாமி ஆகியோரது மணிவிழா 05–12–2011 அன்று ஈரோடு சக்தி துரைசாமி திருமண மாளிகையில் நடைபெற்றதையொட்டி, 'குறையொன்றுமில்லை' என்ற அருமையான தலைப்பில் மணிவிழா மலர் ஒன்று வெளியிடப்பட்டது. 'தோழி' இதழின் வெளியீடான இம்மலரை உருவாக்கிய மலர்க்குழு ஆசிரியர், திரு.த.செ. ஞானவேல் ஆவார்.

முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம், மத்திய உள்துறை அமைச்சர் திரு.ப.சிதம்பரம் ஆகியோரின் வாழ்த்துகள் மற்றும் இத்தம்பதியருக்கு நெருக்கமானவர்களின் நினைவலைகள், நெஞ்சில் நிற்கும் புகைப்படங்கள் முதலானவற்றைக் கொண்டுள்ள இந்த மணிவிழா மலர் அற்புதமாக தயாரிக்கப்பட்டு மணம் வீசுகின்றது.

மணிவிழாத் தம்பதியர் இருவரும் கல்வி, தொழில் சமூகசேவை ஆகியவற்றில் செய்துவரும் பொதுத்தொண்டும், சாதனைகளும் பலராலும் பாராட்டுப் பெற்றுள்ளன. 'ஈதல், இசைபட வாழ்தல்' என்பதற்குச் சிறந்த உதாரணமாக வாழ்ந்துவரும் இத்தம்பதியரின் பன்முகச்சிறப்புகளைக் கூறும் மணிவிழா மலர் சுவையுள்ளதாகவும், பயனுள்ளதாகவும், அரிய செய்திகளைக் கொண்டுள்ளதாகவும், வியத்தகு சாதனைகளை விவரிப்பதாகவும், படிப்போர் நெஞ்சைக் கொள்ளை கொள்வதோடு, தன்னம்பிக்கை, உழைப்பு, முயற்சி, மனிதநேயம் போன்ற பண்புகளை வளர்த்துக்கொள்ள ஊக்குவிப்பதாகவும் உள்ளது.

சக்தி மசாலாவை உருவாக்கிய திரு.பி.சி.துரைசாமி, திருமதி சாந்தி துரைசாமி ஆகியோரின் வாழ்வியல் பற்றி 'விதையின் கதை' என்ற நூலில் திரு. த.செ.ஞானவேல் மிகவும் விரிவாகவும், விளக்கமாகவும், எளிய நடையில் சுவைபடக் கூறியுள்ளார்.

'இந்தியா முழுக்க லட்சக்கணக்கான இல்லத்தரசிகளின் நம்பிக்கையைப் பெற்ற சக்தி மசாலா நிறுவனம் வளர்ந்த கதை, அடுத்த தலைமுறைக்கு நம்பிக்கை

ஊற்று. ஈரோட்டுப் பகுதி சந்தைகளில் தொடங்கிய மஞ்சள் வியாபாரம் இன்று உலகம் முழுவதும், தடம்பதித்துத் தொடர்கிற வெற்றிப் பயணத்தை எம்.பி.ஏ. மாணவர்கள் பாடமாகவே படிக்கலாம். வெற்றியாளர்களின் வாழ்க்கை மேலோட்டமான கதையாகப் பேசப்படுவதைவிட, பலரின் வளர்ச்சிக்கு உதவுகிற விதையாக முளைத்தெழுகிறபோது இன்னும் அர்த்தம் கூடுகிறது. திரு.துரைசாமி – திருமதி சாந்தி துரைசாமி தம்பதியரின் வாழ்க்கை பூமியைத் தாண்டி முளைக்கிற பயனுள்ள விதையாக இருக்கிறது' என திரு.த.செ.ஞானவேல் இந்நூலில் குறிப்பிடுவது மிகவும் பொருத்தமாகவும், பாராட்டும்படியும் உள்ளது.

இத்தம்பதியரின் வாழ்க்கையில் நடந்த முக்கிய நிகழ்ச்சிகள், சாதனைகள், சோதனைகள், சமுதாயப்பணிகள், உறவுகளைப்பேணும் தன்மை, அயராத உழைப்பு, எளிமை, பண்பு போன்ற அருங்குணங்கள் கொண்டுள்ளமை, கல்விப்பணி, சமூக சேவைகள் முதலியன மிக எளிய இனிய நடையில் அழகு மிளிரும் புகைப்படங்களுடன் இந்நூலில் கூறப்பட்டுள்ளன.

உழைப்பும், தன்னம்பிக்கையும் கொண்டு, தோல்வியைக் கண்டு துவண்டு விடாமல், ஏமாற்றமும் சோர்வும் சிறிதும் பாதிக்காத வகையில் வாழ்க்கையில் போராடினால் வெற்றி நிச்சயம் என்ற நம்பிக்கையை, உறுதியை விதையின் கதை என்ற இந்தச் சிறப்புமிக்க நூல், படிப்போர்க்கு ஏற்படுத்தும் என்பது திண்ணம்.

எதுவுமே செய்யாமல் வாழ்க்கையில் முடங்கிப் போவதற்குப்பதில் முயற்சி செய்து பார்த்து விளைவுகளை எதிர்கொள்ளலாம் என்ற இத்தம்பதியரின் நிலைப்பாடு பலரின் சிந்தனையைத் தூண்டும் என்பது நிச்சயம்.

சுயசரிதையைப்போல காலமுறைப்படி அல்லாமல் இயல்பான பகிர்தலாகவும், திருமணத்திற்குப் பின்னர் தம்பதியர் இருவரும் இணைந்தே பேசுவது போலவும் இருப்பது இந்நூலின் தனிச்சிறப்பாகவும்.

இத்தம்பதியரின் மணிவிழா நாளில் வெளியிடப்பட்டுள்ள இந்நூல், 'தோழி' வெளியீடுகளில் ஒரு மகுடமாகத் திகழும் வகையில் அழகு மிளிர, கண்கள் குளிர, கருத்துக் குவியல்களைச் சுவைபட, படிப்போர் மனத்தில் வியப்பையும், மலைப்பையும், ஏற்படுத்தும் விதமாகக் கூறுகின்றது. நூலாசிரியர் திரு.த.செ.ஞானவேல் அவர்களின் கடும் முயற்சியாலும், உழைப்பினாலும் பயனுள்ள வகையிலும், பரவசப்படும் வகையிலும் இந்நூல் உருவாகியுள்ளது. அதற்காக ஆசிரியர் மிகவும் பாராட்டுக்குரியவர்.

மணிவிழாத் தம்பதியரின் சேவை தொடரட்டும்...

❖❖❖❖❖

## குழந்தை வளர்ப்புக்கு ஒரு கடிதம்

தமிழிலும் ஆங்கிலத்திலும் தடிமன் தடிமனான புத்தகங்கள் வாங்கிப் படிக்கிறார்கள். நிபுணர்களிடம் ஆலோசனை கேட்கிறார்கள். பத்திரிகைகளில் வரும் கட்டுமரைகளைப் பார்த்து முயற்சிக்கிறார்கள். நண்பர்களின் அனுபவங்களிலிருந்து கற்றுக்கொள்ளப் பார்க்கிறார்கள். ஆனாலும் 'குழந்தை வளர்ப்பு' என்கிற விஷயம், இளம் தம்பதிகள் பலருக்கு சரிவரக் கைகூடாத ஒன்றாகவே இருக்கிறது.

சக்தி மசாலா திரு.பி.சி.துரைசாமி – திருமதி சாந்தி துரைசாமி தம்பதியர் தங்கள் மகன் செந்தில் குமாருக்கு, தாயும், தந்தையுமாக எழுதிய அறிவுப்பூர்வமான கடிதம் இது. 'குழந்தைகளிடம் என்ன சொல்லி வளர்க்க வேண்டும் என்பதை ஒவ்வொரு பெற்றோரும் உணர்ந்து கற்றுக்கொள்ள இது உதவும்..

**"நாங்கள் மூன்று காரணங்களுக்காக இதை உனக்கு எழுதுகிறோம்...**

1. வாழ்க்கையில் அதிர்ஷ்டம், விதி, கெட்ட நிகழ்வுகள், விபத்து போன்ற பல நிகழ்வுகள் யாரும் எதிர்பாராமல் நேர்பவை, தான் எவ்வளவு நாள் வாழப்போகிறோம் என்பது யாருக்கும் தெரியாது. அதனால் சிலவற்றை முன்கூட்டியே சொல்லிவிடுவது நன்று.
2. நாங்கள் உனது பெற்றோர். இவற்றையெல்லாம் சொல்ல வேண்டிய கடமை எங்களுக்கு இருக்கிறது. நாங்கள் இவற்றையெல்லாம் உனக்குச் சொல்லாவிட்டால், வேறு யாரும் சொல்லமாட்டார்கள்.
3. நாங்கள் எழுதியிருப்பவை எல்லாம் எங்களுடைய சொந்த வாழ்க்கையில் எதிர்கொண்ட கசப்பான அனுபவங்கள். தேவையற்ற மனவலி மற்றும் பிரச்சினைகளிலிருந்து உன்னைக் காப்பாற்ற இவையெல்லாம் ஒருவேளை உதவக்கூடும் என எண்ணுகிறோம்.

**உன்னுடைய வாழ்க்கைப் பயணத்தில் கீழ்க்கண்டவற்றை நினைவில் கொள் :–**

உனக்கு நல்லவர்களாக யாரெல்லாம் நடந்து கொள்ளவில்லையோ, அவர்கள்மீது எந்த மனவருத்தமும் கொள்ள வேண்டாம். பெற்றோர் ஆகிய எங்களைத் தவிர்த்து பேறு யாருக்கும் உன்னை நல்வழியில் நடத்த வேண்டிய கடமை இல்லை. யாரெல்லாம் உனக்கு நல்லவர்களாக இருக்கிறார்களோ, அவர்களையும் அவர்கள் செயல்களையும் உயர்வாக மதிப்பதோடு, அவர்ளுக்கு நன்றிக்கடன் பட்டவனாகவும் இருத்தல் வேண்டும். அதேசமயம், நீ அவர்களிடம்

மிகவும் கவனமாக இருக்க வேண்டும். ஏனென்றால், ஒவ்வொருவருடைய செயலிலும் ஒரு குறிக்கோள் இருக்கும். ஒருவர் உன்னிடம் நல்லவராக நடந்துகொண்டால், அவர் உன்னை உண்மையில் நேசிக்கிறார் என்று அர்த்தம் அல்ல. ஆகவே அவசரப்படாமல் அவரை உண்மையான நண்பராக ஏற்றுக்கொள்வதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். ஒருவரை நம்பிக்கைக்கு உரியவராக உணர்ந்துகொண்டால், அதன்பிறகு எப்பொழுதும் அவரைச் சந்தேகிக்கக் கூடாது. கடவுள் நமக்கு உண்மையான கண்களை எதற்குக் கொடுத்திருக்கிறார் என்றால் உண்மைக்குப் புறம்பானதை உணர்த்ததான். எனவே ஒரு செயலைச் செய்யுமுன் ஒரு தடவைக்கு இரண்டு முறை யோசித்து புத்திசாலித்தனமாக செயல்பட வேண்டும்.

இந்த உலகில் யாரும் தவிர்க்க முடியாதவர்கள், இன்றியமையாதவர்கள் இல்லை. நீ உனக்கு என்று எதையும் வைத்துக்கொள்ள வேண்டாம். இதை நீ உணர்ந்தால் உன்னைச் சுற்றியுள்ளவர்கள் உன்னை வெறுத்து ஒதுக்கினாலும், நீ மிகவும் விரும்பும் ஒருவரையோ, ஒன்றையோ இழந்தாலும், வாழ்க்கைப் பயணத்தை எளிதாகத் தொடர இயலும்.

வாழ்க்கை என்பது அற்ப காலம் இருக்கும் ஒன்று. இன்றைய வாழ்க்கையை நீ வீணடித்தால், நாளைய வாழ்க்கை உன்னைவிட்டு விலகுவது போல் தோன்றும். வாழ்க்கையை உயர்வாகக் கருதி மதிக்கக்கற்றுக்கொள். அப்போதுதான் வாழும் ஒவ்வொரு கணத்தையும் இனிமையானதாக ஆக்கிக்கொண்டு அனுபவித்து வாழமுடியும்.

அன்பு மற்றும் நேசிப்பது என்பது கணத்தில் தோன்றி மறைகின்ற ஒரு உணர்ச்சி போன்றது. இந்த உணர்வு ஒருவரின் மனநிலையைப்பொறுத்து ஒரு காலகட்டத்திற்குள் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து மறைந்து போகும். நீ நேசித்த, அன்பு காட்டிய ஒருவர் உன்னை விட்டுப் பிரிந்து, விலகிச்செல்லும் பட்சத்தில் அமைதி கொள். காலம் உனது வலியையும், வருத்தத்தையும் துடைத்துவிடும். அன்பின் ஆழத்தையும் அழகையும், இனிமையையும் மிகவும் மிகைப்படுத்திக்கூறவேண்டாம். அதேபோல், அன்பானவர்கள், நேசிப்பவர்கள் விலகிச் செல்லும் பட்சத்தில் வருத்தத்தை மிகவும் மிகைப்படுத்திக்காட்ட வேண்டாம்.

வாழ்க்கையில் வெற்றி பெற்ற பலர் நல்ல கல்வியைப் பெற்றிருக்கவில்லை. கல்வியால் நீ பெறக்கூடிய அறிவு, உன் வாழ்க்கையின் வளர்ச்சிக்கு ஒரு ஆயுதமாகப் பயன்படும். அதன்மூலம் ஒருவன் தாழ்ந்த நிலையிலிருந்து உயர்ந்த நிலைக்குச்செல்ல இயலும். ஆனால், உயர்ந்த நிலைக்குச்செல்லும் அந்தப்

பயணத்தை ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு சந்தர்ப்ப சூழ்நிலையில்தான் தொடங்க முயற்சிக்க வேண்டும்.

நாங்கள் முதுமையடையும்போது, உன்னிடமிருந்து பொருளாதாரரீதியாக எந்தவிதமான உதவியையும் எதிர்ப்பார்க்கவில்லை. நீ வளர்ந்து பெரியவனாக ஆனதும், பெற்றோர் என்ற முறையில் உனக்கு உதவியாக இருக்க வேண்டிய எங்கள் கடமை முடிவுறுகிறது. இருந்தாலும், பிள்ளைகளுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளை மூச்சு உள்ளவரை தொடர்ந்து செய்வோம். அதற்குப்பின் உன் பயணம் எத்தகையதாக இருக்க வேண்டும் என்பதை நீ முடிவு செய்து கொள்.

உன் வார்த்தைகளுக்கு நீ மரியாதை கொடு, ஆனால் மற்றவர்களிடமும் அதை எதிர்ப்பார்க்காதே, நீ மற்றவர்களுக்கு நல்லவனாக இருக்கலாம். ஆனால் மற்றவர்கள் உனக்கு நல்லவர்களாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்காதே. நீ இதை உணர்ந்தால் வாழ்க்கையில் தேவையற்ற இன்னல்களைச் சந்திக்க வேண்டியது இல்லை.

வாழ்க்கையில் மென்மேலும் உயர வேண்டுமானால், எதையும் எதிர்பார்க்காமல் கடினமாக உழைக்க வேண்டும்.

உதாரணத்திற்கு, காற்றில் காகிதம் பறக்கக் காரணம் அதனுடைய அதிர்ஷ்டம். ஆனால் ஒருபறவை காற்றில் பறப்பதற்குக் காரணம் அதன் முயற்சி. எனவே அதிர்ஷ்டம் துணை நிற்காவிட்டாலும், முயற்சி உயர்வுக்குக் கண்டிப்பாக வழிவகுக்கும்.


நாங்கள் உன்னோடு எவ்வளவு காலம் இருக்கிறோம் என்பது முக்கியமல்ல. நாம் ஒன்றாக இருக்கும்போது செல்வத்தையும் காலத்தையும் உயர்வாக மதித்துக்காப்போம். ஏனென்றால், அடுத்த பிறவியில் நாம் எல்லோரும் மீண்டும் சந்திப்போமா என்பது நமக்கே தெரியாது. நல்ல உறவு என்பது ஒரு சிறந்த தெரு விளக்கைப்போன்றது. அது உனது பயண தூரத்தைக் குறைக்காது. ஆனால் உனது பாதையில் வெளிச்சத்தைக் கொடுத்து, உன் பயணம் எளிதாக அமைய வகை செய்யும்.

ஆல்போல தழைத்து, அருகு போல வேரூன்றி வாழையடி வாழையாக வாழ்ந்து, மூங்கில் போல கிளைத்து இந்தச் சமுதாயம் பயனுற வாழ எல்லாம் வல்ல இறையருளான விநாயகரையும். நமது குலதெய்வமான சீதேவி அம்மனையும், இஷ்ட தெய்வமான முருகனையும் வேண்டி வாழ்த்துகிறோம்''.

நன்றி : மணிவிழா மலர்

❖❖❖❖❖

# என்றும் நலமுடன் வாழ முதியோர் மருத்துவத்தின் சிறப்பு



கொங்குமாமணி Dr.வி.எஸ்.நடராசன்

முதியோர் மருத்துவர்

## விதி விலக்கு

டிமென்சியா நோயின் முதல் அறிகுறியே மறதிதான். அதிலும் அண்மைக்கால நினைவு முற்றிலும் மறந்து விடும். ஆனால் பழைய நினைவுகள் நிலைத்திருக்கும். அவருடைய நடை,உடை,பாவனைகளில் ஒரு குழந்தைத்தனம் தெரியும். தெரிந்த வேலைகள் செய்வதிலும், முடிவு எடுப்பதிலும் சிரமப்படுவார்கள். இத்தோடு ஒரு சிலருக்குப் பாலுணர்வு சம்மந்தமான தொல்லைகளும் ஏற்படலாம்.

டிமென்சியா நோயாளிகளின் செக்ஸ் சார்ந்த தொல்லைகள் பற்றி அதிகம் வெளியே தெரிவதில்லை. அப்படி ஏதாவது இருந்தாலும், உறவினர்கள் அதை டாக்டரிடம் சொல்லக் கூச்சப்பட்டு, மறைத்து விடுகிறார்கள்.

பொதுவாக டிமென்சியாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு செக்ஸ் உணர்வு சற்று குறைவாகத்தான் இருக்கும். அப்படி அந்த உணர்வு இருந்தாலும், அதை அவர்கள் விரைவில் மறந்துவிடுவதால், அதை அவர்களால் செயல்படுத்த முடியாமல் போய் விடும். மறதி நோயால் பாதிக்கப்பட்டவர்கள், சில சமயங்களில். தனது ஆடையை அவிழ்த்து விடுவர். பிறப்பு உறுப்புகளைத் தனது கையால் அடிக்கடி தொட்டுப்பார்ப்பார், மற்றவர்கள் பார்ப்பார்கள் என்ற உணர்வு ஏதும் இருக்காது. சில வேளைகளில் கெட்ட வார்த்தையினால் வீட்டில் உள்ளவரைத் திட்டுவார். இப்படிப் பட்டவர்களை வீட்டில் வைத்து சமாளிப்பது மிக, மிகச் சிரமம். வீட்டில் மனைவி, மகன், மகள், மருமகள், பேரக்குழந்தைகள் நடுவே இப்படியொரு டிமென்சியா நோயாளி இருந்தால், நிலைமை எப்படி இருக்கும் ? நீங்களே யோசித்துக் கொள்ளுங்கள் !

என் அனுபவத்தில், மறதி நோயோடு, செக்ஸ் தொல்லையும் சேர்ந்த ஒரு டிமென்சியா நோயாளியினால் ஒரு குடும்பத்திற்கு ஏற்பட்ட விளைவுவைப் பற்றி ஓர் உண்மைச் சம்பவத்தைச் சற்று மனவேதனையுடன் எழுதுகிறேன்.

அது ஓர் ஆசாரமான, வேதம் பயின்ற குடும்பம். குடும்பத் தலைவர் சர்மாவை அவருடைய மகன்கள் இருவரும் அழைத்து வந்திருந்தனர். இருவருமே தனியார் கம்பெனிகளில் பொறுப்பான பதவி வகிக்கிறவர்கள்.

ஆஜானுபாகுவான தோற்றமும், மிடுக்கும் கொண்ட பெரியவருக்கு வயது எழுபதைத் தொட்டுவிட்டது என்று சொன்னால் நம்புகிற மாதிரி இல்லை. அரசாங்கத்தில் தலைமைப் பொறுப்பு வகித்து ஓய்வு பெற்றவர்,

“டேய் சேது...” சின்ன மகனை அழைத்தார். ஒரு கெட்ட வார்த்தை

பிரயோகித்து, “முந்தைய நர்ஸிங்ஹோம் ஃபைல் கொண்டு வரலை ?”

“கார்லதான் இருக்குப்பா. கொண்டு வரரேன் ......” பெரிய மகன் சுப்பு முந்திக் கொண்டு வெளியேறினார்.

“தூத்தெறி....” பெரியவரிடமிருந்து மீண்டும் ஒரு கெட்ட வார்த்தை.

சர்மாவின் மகன் தொலைபேசியில் அவருடைய மறதியைப் பற்றி முன்பே தெரிவித்திருந்ததால், அதைப் பற்றி அவரிடம் கேட்கவில்லை. “மிஸ்டர் சர்மாஜி, உங்களுக்கு என்ன ப்ராப்ளம் ?” என்று மெல்ல நெருங்கி அவரிடம் பேச்சுச் கொடுத்தேன்.

அவர் ஒரு முறை என்னை ஏற இறங்கப் பார்த்தார். முகத்திலடித்தார் போல், “அதான் ஃபைல் கொண்டாரச் சொல்லியிருக்குது இல்லே ? பாருங்க, தெரியும்” என்றார் அவர்.

முறைப்படி ஜெனரல் செக்கப் கொடுத்தேன். நான் எதிர்பார்த்தபடியே அதற்கு அவர் சரியான ஒத்துழைப்பு கொடுக்கவில்லை. உளவியல் நிபுணர் உதவியுடன் மறதி சார்ந்த பரிசோதனைகளும் செய்யப்பட்டன. அவருக்கு டிமென்சியா இருப்பது உறுதி செய்யப்பட்டது. மறதி நோயுடன் லேசான இதய நோய் இருப்பது தெரிந்தது. மாத்திரை எழுதிக் கொடுத்தேன்.

“எனக்கு என்ன கேடு டாக்டர் ?” சர்மாஜி மதர்ப்பாய்க் கேட்டார்.

“நத்திங்ராங். லேசா ஹார்ட் ப்ராப்ளம். ஒரு கோர்ஸ் எடுத்துக்குங்க. அடுத்த மாதம் பார்க்கலாம்,” என்று விடை கொடுத்தேன்.

பின் தொடர்ந்த சுப்பு, மெல்லத் திரும்பி, தான் அப்பாவை அனுப்பிவிட்டுத் திரும்ப வந்து பார்ப்பதாய் ஜாடை காட்டிவிட்டுச் சென்றார்.

“டாக்டர், கொஞ்சம் கூட இங்கிதமில்லாமல் என் அப்பா உங்களெதிரில் அப்படியெல்லாம் கெட்ட வார்த்தைகள் பேசியதற்காக மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்” என்று கூறிவிட்டு அப்பாவைப் பற்றி சொன்னார்.

டாக்டர், வயசானவங்களுக்கு வயசு திரும்பும்னு சொல்லுவாங்க, குழந்தை மாதிரி நடந்துக்கறதைத்தான் அப்படிச் சொல்றாங்கன்னு நினைச்சிருந்தேன். ஆனா எங்கப்பா... இப்ப வயசுப் பையன் மாதிரி நடந்துக்கிறார். டாக்டர். நோ. நோ. நீங்க ஊகம் பண்றாப்ல இல்லை. மருமகள்களை அவர் ஒரு ரெஸ்பெக்டபிள் டிஸ்டன்ஸ்ல தான் வச்சிருக்கார்.

ஆனா எங்கம்மா ரொம்ப பாவம் டாக்டர். பழுத்த பழம். டாக்டர், எனக்குச் சொல்லவே கூச்சமா இருக்கு. இவர் அவர்கிட்ட போய் இடுப்பைக்கிள்றது, இசகு பிசகாகக் கை வைக்கிறது, இப்படியெல்லாம் சில்மிஷம் பண்றார். அதுவும் எங்களுக்கு முன்னால், பேரன், பேத்திகள், மருமகள்களுக்கு முன்னால். அம்மா அப்படியே கூசிக் குறுகிப் போய் நெளியறதைப் பார்க்கக் கண்றாவியா இருக்கு.

எத்தனை நாள்தான் பொறுத்துக் கொண்டு இருக்கிறது ? ரெண்டு நாளைக்கு

முன்னாடி, “ அப்பா, உங்க வயசுக்கு இப்படியெல்லாம் நடந்துக்கலாமா ?” என்று கேட்டுட்டேன்.

வந்தது வினை! “ஏன்டா நாயே, நான் என்ன, உன் சம்சாரத்து மேலயா கை வைச்சேன் ? என் பெண்டாட்டியை நான் என்ன வேணா செய்வேன். அதைக் கேட்க நீ யாருடா பேமானி ?” அப்படி இப்படி அகராதிக்குச் சிக்காத அசிங்கமெல்லாம் ஒரு பாட்டம் திட்டித் தீர்த்துவிட்டு, எல்லோருக்கும் முன்னால எங்கம்மாவைக் கட்டிப் பிடிச்சு, “நீ வாடி உள்ளே” ன்னு, பெட்ரூமுக்கு இழுத்துப் போய் கதவைத் தாப்பா போட்டுட்டார்.

அம்மா வேதனையிலே முனகி அழுது துடிக்கிற சத்தம் வெளியே கேட்கிறது. எங்களால என்ன பண்ண முடியும். சொல்லுங்க.

முதியவர்களுக்கு அன்பு, ஆதரவு, அனுதாபம் காட்டும்படி இளையவர்களிடம் இறைஞ்சிக் கேட்கும் அனுபவத்தைத்தான் நான் இதுவரை சந்தித்திருக்கிறேன். இந்தக் கேஸில் அதே அன்பு, ஆதரவு, அனுதாபத்தைக் குடும்பத்திலுள்ள இளையவர்களிடம் காட்டும்படி ஒரு முதியவரிடம் மண்டியிடும் நிலைக்கு நான் தள்ளப்பட்டிருக்கிறேன். அப்படி நான் கேட்டுக் கொண்டாலும் அதற்குப் பலன் இருக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை.

கிட்டத்தட்ட மூன்று மாதத்துக்குப் பிறகு சர்மாஜியை அவரது மூத்த மகன் சுப்பு அழைத்து வந்திருந்தார்.

சென்ற முறை சந்தித்தபோது பெரியவரிடமிருந்த அட்டகாசத்துக்கு ஏதும் பழுது ஏற்படவில்லை. “எனக்கு உடம்புக்கு ஒரு கேடுமில்லை. மாத்திரை போட்டுக்காம தூங்க முடியறதில்லை. அவ்வளவு தான்,” என்று அலட்சியமாய்ச் சொன்னாலும் ரொட்டீன் செக்கப்புக்கு ஓரளவிற்கு உடன்பட்டார்.

கொஞ்சம் ப்ளட் பிரஷர் கூடியிருந்தது. மருந்து எழுதி வாங்கிக் கொண்டு தந்தையுடன் வெளியே சென்ற சுப்பு அவரைக் காரில் உட்கார வைத்துவிட்டுத் தனியே என்னைப் பார்க்க வந்தார்.

“ஒரு நிமிஷம் நான் டாக்டரைத் தனியாகப் பார்க்கணும்” என்று உள்ளே வந்த பேஷண்டிடம் கேட்டுக் கொள்ள, அவர் வெளியேறியதும், அறைக்கதவைத் தாழிட்டுக் கொள்ள என் கைகளைப் பற்றிக் கொண்டு பொல பொலவென்று கண்ணீர் விட்டுச் சொன்னார்.


“அன்றைக்குச் சொன்னேனே அந்த விபரீதம், அதற்கப்புறம் அம்மா, பேரன், பேத்திகள், மருமகள்கள் முன்னாலேயே அப்படித் தலைகுனிவாய்ப் போச்சுன்னு வெளிய தலை காட்டாம ஒருத்தரண்டையும் பேசாம, சரியாச் சாப்பிடாம... அவங்க போய்ச் சேர்ந்தாச்சு டாக்டர்”. அந்தப் பெரியவர், மனைவி இறந்த துக்கத்தைச் கூடக் காட்டவில்லையே!

அப்பெரியவருக்கு மறதி நோயோடு, மிக்க ஆளுமைத் தன்மையும் சேர்ந்ததின் விளைவுதான் போலும்!

டிமென்சியா நோயாளிகளில் சர்மா ஒரு விதிவிலக்கு.

❖❖❖❖❖

# பெரும் புலவர் தெய்வ சிகாமணிக் கவுண்டர்



பெரும்புலவர் தெய்வசிகாமணிக் கவுண்டரை உங்களுக்குத் தெரியுமா ? என்று தமிழாசிரியர்களையும், ஏன் தமிழறிஞர்கள் பலரையும் கூட நீங்கள் கேட்டுப் பாருங்களேன். அதில் பலருக்கும் அவரைப் பற்றித் தெரிந்திருக்காது. இவர்களுக்கெல்லாம் தெரியவில்லை என்பதால் அந்த மாமனிதரின் தமிழ்ப்பணி சிறியது என்று சொல்லிவிடவா முடியும் ? பெயருக்கும் புகழுக்கும் ஆசைப்பட்டா அந்த மிகப்பெரிய செல்வந்தர் தமிழாசிரியர் பணியில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார் ?

ஈரோடு மாவட்டம் வேலம்பாளையம் என்கிற சிற்றூரில் கடந்த நூற்றாண்டில் பிறந்தவர் தெய்வசிகாமணிக்கவுண்டர். அவருக்குத் தாய்வழிப்பாட்டன் தந்த கொடைதான் தமிழார்வம். அவரது விருப்பத்தின்பேரில் தமிழ் இலக்கண – இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்ததுடன் நின்றுவிடாமல், சிதம்பரம் ஆறுமுக நாவலர் கலாசாலையில் பயின்று, மதுரைத் தமிழ்ச் சங்கத்திலிருந்து புலவர் பட்டம் பெற்று, தமிழாசிரியர் பணியில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார்.

'தமிழ்த்தாத்தா' உ.வே.சாமிநாதையர், யாழ்ப்பாணம் புலவர் சி.வை.தாமோதரன் பிள்ளை போன்றவர்களது பங்களிப்புக்கு இம்மியும் குறைவில்லாத பங்களிப்பு தெய்வசிகாமணிக் கவுண்டருடையது. ஏடுகளைத் தேடிப் பிடித்துத் தமிழுக்குப் பெரும் தொண்டாற்றிய இப்பெருமகனார் ஆற்றியிருக்கும் சாதனைகள் ஏராளம் ஏராளம்.

திருக்குறளுக்குப்பழைய உரையாசிரியர்கள் பத்து பேர் என்று கூறப்படுகிறது. அவர்களில் ஆறு பேருடைய உரைகள் மட்டும்தான் நமக்குக் கிடைத்திருக்கின்றன. அந்த ஆறில் மூன்று – பரிதிமார், காளிங்கர்,மல்லர் – உரைச் சுவடிகளைத் தேடிப்பிடித்துத் தந்தவர் தெய்வசிகாமணியார்தான். அதேபோல, திருமுருகாற்றுப்படைக்கு ஐந்து உரைகள் உள்ளன. அவற்றில் பரிதிமார், கவிப்பெருமாள் உரை ஏடுகளைக் கண்டுபிடித்துத் தந்தவரும் அவர்தான்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கம்பராமாயணம் பதிப்பிக்க ஐந்து முழு ஓலைச்சுவடிகளைக் கொடுத்துதவியவரும், புறநானூற்றின் பழைய உரை கிடைக்காத பகுதிகளைக் கண்டுபிடித்துப் 'புறத்துறை விளக்கம்' என்ற பெயரில் வெளியிட்டவரும் இவர்தான்.

தெய்வசிகாமணிக் கவுண்டரின் தமிழ்த் தொண்டிலேயே மிகப் பெரிய தொண்டு அறிவனார் எழுதிய 'பஞ்ச மரபு' என்ற சங்க கால இசை நூலைக் குடந்தை சுந்தரேசனார் என்கிற இசை அறிஞரின் துணையோடு தேடிப் பிடித்து அச்சிட்டு வெளியிட்டதுதான். இதற்கு 'அருட்செல்வர்' நா. மகாலிங்கம் பெரும்புலவருக்குத் துணை நின்றார் என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும்.

'பஞ்ச மரபு' என்கிற சங்க கால இசை நூல்தான் சிலப்பதிகாரத்தில் அரங்கேற்றக் காதைக்கு உரை எழுதத் தனக்கு மிகவும் பயன்பட்டதாக அடியார்க்கு நல்லார் குறிப்பிட்டிருந்ததை மனதில் வைத்துக்கொண்டு எங்கெங்கெல்லாமோ தேடி அலைந்து அந்த ஓலைச் சுவடிகளைத் திரட்டிருக்கிறார் தெய்வசிகாமணிக் கவுண்டர் என்று தெரிகிறது.

இன்றைய கர்நாடக சங்கீதத்தின் அடிப்படை ஆதாரமே நமது தமிழிசைதான்

என்பதை உறுதிப்படுத்தும் ஆவணமாக நமக்குக் கிட்டியிருக்கும் 'பஞ்ச மரபு' தமிழுக்குக் கிடைத்த மிகப்பெரிய கொடை. அந்த ஒரு பங்களிப்புக்காகவே பெரும்புலவர் தெய்வசிகாமணிக் கவுண்டரை எவ்வளவு போற்றினாலும் தகும்.

**1903**–இல் தொடங்கிய தெய்வசிவாமணிக் கவுண்டரின் தமிழ்ப் பயணம் **1976** – இல் முடிந்தது. ஈரோடு மக்கள் சிந்தனைப் பேரவை கடந்த ஞாயிறன்று 'பெரும்புலவர்' தெய்வசிகாமணிக் கவுண்டரின் படத்தைத் திறந்து வைத்து அவரது தமிழ்ப் பணியை நினைவுகூர்ந்தது. நண்பர் ஸ்டாலின் குணசேகரனின் அழைப்பின் பேரில் அதில் கலந்து கொள்ளும் நல்லதொரு வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது.

தமிழுக்குத் தொண்டு செய்தவர்கள், செய்பவர்கள் பலர் உண்டு. ஆனால் தமிழுக்காகத் தியாகம் செய்தவர்கள் சிலர்தான் உண்டு, அந்தச் சிலரில் நிச்சயமாக தெய்வசிகாமணிக் கவுண்டரும் உண்டு !

நன்றி : கலாரசிகன், தினமணி

❖❖❖❖❖

## மணமகன் தேவை

ஜாதகர் பெயர் : ஆர்.நிவேதிதா
பிறந்த தேதி : **31–01–1989**
பிறந்த நேரம், இடம் : 7.45 p.m., சென்னை
நட்சத்திரம் : அனுஷம் (பாதம் 1)
ராசி : விருச்சிகம்,
லக்கினம் : சிம்மம்
தந்தை பெயர் : சி.இராஜமாணிக்கம்
தந்தை தொழில் : பேராசிரியர் (ஓய்வு), பச்சையப்பன் கல்லூரி, சென்னை
தாயார் பெயர் : ஆர்.சாந்தாமணி
தொழில் : Raj Construction, Civil Engineering Contractors. Chennai - 600 040.
உடன் பிறப்பு : 2 அக்கா, திருமணமாகிவிட்டது.
கல்வி : B.Com.,
குலம் : சாத்தந்தை கூட்டம்
சொந்த ஊர் : கனகபுரம், ஈரோடு
மற்றவிவரம் : நேரில்
போன் : **9841697779, 9841742329**

| | | | |
|---|---|---|---|
| | செவ் | குரு | |
| இராகு | இராசி | | |
| சூரி பு / சுக் | | | ல / கே |
| சனி | சந்திரன் | | |

| | | | |
|---|---|---|---|
| | | | சூரியன் |
| புதன் வ | நவாம்சம் | | ல / கேது |
| குரு இரா/சுக் | | | செவ்வ சந் / சனி |
| | | | |

## பாரதியார் சாந்தி இல்ல அறக்கட்டளை



(முதியோர் காப்பகம்)

ராஜன் நகர் – சத்தியமங்கலம் – 638451

''வயோதிகம்'' என்பது வாழ்க்கையின் கடைசி அத்தியாயம். அன்பு, பாசம், நேசம், விசுவாசம் – இவற்றிற்காக மனித மனம் ஏங்கித் தவிக்கும் கடைசிக் காலக் கட்டம். இவை கிடைக்காதபோதோ, மறுக்கப்படும்போதோ அல்லது தடுக்கப்படும்போதோ திக்குத் தெரியாமல் தவித்திடும் வயோதிக நெஞ்சங்களுக்கு ஆறுதலாக, அன்பு வழிகாட்டி, அவர்தம் எதிர்கால வாழ்க்கையினை மறுமலர்ச்சி செய்வதே ''பாரதியார் சாந்தி இல்லம்'' என்ற இந்த அறக்கட்டளை அமைப்பின் மையக் கருத்தாகும்.

சாதிமத பேதமற்ற, ஏழை– பணக்காரன் என்ற ஏற்ற தாழ்வின்றி எந்த உயிராயினும் உணர்வு ஒன்றுதான் என்ற அருள் உணர்வோடு திக்கற்ற வயோதிக உள்ளங்களின் ஏக்கங்களைத் துடைத்து, அன்பு, பாசம் என்ற இருகரம் நீட்டி வாஞ்சையோடு வரவேற்று உள்ளன்போடு உண்ண உணவு, உறங்க இருப்பிடம், நோய்க்கு மருந்து, மருத்துவம், மன அமைதிக்குத் தியானம், மகிழ்ச்சிக்குக் கூட்டுப் பிரார்த்தனை, ஆன்ம பலத்திற்கு ஆன்றோர்களின் சொற்பொழிவுகள் மற்றும் ஒத்த வயதினர்களுடன் கலந்துரையாடல் ஆகிய அனைத்தையும் ஈந்து அகமகிழ்விக்க ஒரு தனிமனிதனால் இயலாது. ஆகையால் ஒத்த எண்ணங்களையும் கருத்துகளையும் கருவாகக் கொண்ட, தொண்டு உள்ளம் படைத்த பல தெய்வீக உள்ளம் கொண்ட அறங்காவலர்களின் கூட்டான முயற்சிதான் இந்த ''பாரதியார் சாந்தி இல்லம்'' எனும் ஆலவிருட்சம். இந்தத் தெய்வீக அறக்கட்டளை தலைவர் திரு. S.P. குமாரசாமி, பொதுச் செயலாளர் திரு. C. வெங்கடேசன், பொருளாளர் திரு. A.M. சின்னராஜன், கோபி திரு. P. பாலசுப்பிரமணியன், சக்தி ஆடிட்டர் திரு. P. மயில்சாமி, சக்தி திரு. K. துரைசாமி, கோவை திரு. S. நாகராஜன், சக்தி அமரர் திரு. நல்லாக் கவுண்டர் ஆகியோர்களது அயராத அழைப்பும், விடா முயற்சியும் தன்னம்பிக்கையுடனும் 1995– ஆம் ஆண்டு 23 அறங்காலவர்களைக் கொண்டு மஞ்சள் மாவட்டமான ஈரோடு, சத்திய மங்களம் அருள்மிகு பண்ணீர் அம்மன் திருக்கோயிலுக்குத் தெற்கே சுமார் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் மெயின் ரோட்டின் மேல்புறம் சுமார் 40 ஏக்கர் நிலப்பரப்பில் இந்த இல்லம் அமைக்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

தர்ம சிந்தனை கொண்ட பெருமக்களான பண்ணாரி அம்மன் குடுபத்தின் தலைவர், அருள்நிதி டாக்டர் S.V. பாலசுப்பிரமணியம், கோவை செந்தில் குழுமத்தின் தலைவர், திரு. O. ஆறுமுகசாமி, பவானி திரு. முனிராஜா மற்றும் இல்லத்தின் அறங்காவலர்கள் பலரும் பொருளுதவி செய்து இல்லத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் உறுதுணையாக இருந்து வருகிறார்கள்.

இல்லத்தின் எல்லையைச் சுற்றிலும் வேம்பு, புங்கன் ஆகிய நிழல்தரும் மரங்கள் நட்டு, சுற்றுப் பாதை அமைத்து, தென்னை, மா, சப்போட்டா, கொய்யா போன்ற பழ மரங்கள் நட்டும், இடையே பூ மரங்கள் நட்டும் பிரமாண்டமான சோலையின் நடுவில் 35,000 சதுர அடி பரப்பளவில் முதியோர் மகிழ்ந்து வாழ முற்றிலும் கான்கிரீட்டால் ஆன அழகிய கட்டிடங்களில் நவீன கழிப்பறை மற்றும் வெந்நீர் வசதியுடன் கூடிய படுக்கை அறைக்குண்டான அனைத்து வசதிகளுடன் கூடிய விசாலமான அறைகள், நவீன சமையல் அறை, உணவுக் கூடம் அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் தியான மண்டபம், இறை வழிபாடு செய்ய இராஜ கணபதி விநாயகர் கோவில் நிறுவப்பட்டுள்ளது.

ஈசா யோக மையத்தின் கிராமப்புற புத்துணர்வு இயக்கத்தின் மருத்துவக் குழு மாதம் இருமுறை வந்து தங்கி, அனைத்துப் பயனாளிகளையும் பரிசோதித்து மருந்து இலவசமாக வழங்கப்படுகிறது. மேலும் பண்ணாரி அம்மன் குழுமம் சார்பாக மருத்துவர் ஒருவர் வாரம் ஒருமுறை இல்லத்திற்கு வருகை தந்து பயனாளிகளுக்கு மருத்துவ ஆலோசனைகள் வழங்குகிறார்.

பயனாளிகள் மற்றும் பணியாளர்களுக்கு அவ்வப்போது அவசர மருத்துவ உதவி தேவைப்படுவதைக் கருத்தில் கொண்டு கோவை மத்திய ரோட்டரி கிளப் சங்கத்தின் தலைவர், திரு. V,P. மோகன்குமார் அவர்களின் ஏற்பாட்டில், அவர்தம் உறவினரும், இல்லத்தின் முன்னாள் உதவிச் செயலாளருமான மறைந்த திரு. S, நாகராஜன் அவர்கள் நினைவாக சுமார் 3 லட்சம் மதிப்புள்ள ஆம்புலன்ஸ் ஆம்னி வேன் ஒன்று வழங்கியுள்ளார்கள்.

பொழுதுபோக்கு அம்சங்களான செய்தித் தாள்கள், இசை கேட்டு மகிழ்ந்திட வானொலிப்பெட்டியும், தொலைக்காட்சிப் பெட்டியும், அறிவையும் ஆன்மீகத்தையும் வளர்த்திட புத்தகங்கள் நிறைந்த நூலகமும் அமைக்கப்பட்டுள்ளன.

நல்லதொரு நவீன மருத்துவமனை அமைத்திடல், பொருளாதாரத்தைப் பெருக்கிட கூட்டுப்பாசனத் திட்டத்தின் மூலம் நவீன விவசாயம், பால்பண்ணை, பெரியோர்கள் தங்களால் இயன்ற கைவினைப்பொருட்கள் செய்திடும் சிறுதொழில் கூடம் போன்றவற்றை அமைப்பது எதிர்காலத் திட்டங்களாகக் கொண்டுள்ளது.

தற்சமயம் 380 அறங்காவலர்களைக் கொண்ட இவ்வில்லம் 100 முதியோர்களை அன்புடனும் பாசத்துடனும் அரவணைத்து வரும் இன்றைய நிலையில் தங்க இடம் கேட்டு 70க்கும் மேற்பட்ட வயோதிகர்கள் காத்திருப்போர் பட்டியலில் உள்ளனர். அவர்கள் அனைவருக்கும் இடவசதி செய்து கொடுக்க எங்களது நேசக்கரங்களை உங்களிடம் நீட்டுகிறோம்.

தலைவர் மற்றும் அறங்காவலர்கள்

❖❖❖❖❖

## வாழ்க்கையில் முன்னேற பதினெட்டுப்படிகள்

| | |
|---|---|
| வாழ்க்கை ஒரு சவால் | அதைச் சமாளி |
| வாழ்க்கை ஒரு பரிசு | அதைப் பெற்றுக் கொள் |
| வாழ்க்கை ஒரு சாகசம் | அதில் துணிவு காட்டு |
| வாழ்க்கை ஒரு சோகம் | அதை அடைத்துவிடு |
| வாழ்க்கை ஒரு கடமை | அதை முடித்துவிடு |
| வாழ்க்கை ஒரு விளையாட்டு | அதில் பங்குகொள் |
| வாழ்க்கை ஒரு துன்பம் | அதை எதிர் கொள் |
| வாழ்க்கை ஒரு புதிர் | அதற்கு விடை காணு |
| வாழ்க்கை ஒரு பாடல் | அதைப்பாடி விடு |
| வாழ்க்கை ஒரு வாய்ப்பு | அதைப் பயன்படுத்து |
| வாழ்க்கை ஒரு பயணம் | அதைக் கடந்து விடு |
| வாழ்க்கை ஒரு வாக்குறுதி | அதைக் காப்பாற்று |
| வாழ்க்கை ஒரு காதல் | அதை அனுபவி |
| வாழ்க்கை ஒரு வனப்பு | அதைப் புகழ்பாடு |
| வாழ்க்கை ஒரு போராட்டம் | அதனுடன் போராடு |
| வாழ்க்கை ஒரு குழப்பம் | அதைத் தீர்த்து விடு |
| வாழ்க்கை ஒரு இலக்கு | அதை அடைந்து விடு |

வாழ்க்கை ஒரு தெய்வீகமானது

**அருள்மொழிகள்**

| | |
|---|---|
| சிந்தித்துக் பேசுக | சமயமறிந்து பேசுக |
| உண்மையே பேசுக | நன்மையே பேசுக |
| அன்பாக பேசுக | இனிமையாகப் பேசுக |
| மெதுவாகப் பேசுக | பேசாதிருந்தும் பழகு! |

## உடல் இளைக்க உணவு

**தேவையான பொருட்கள் :–**

நாட்டுச்சோளம் 2 கப், து.பருப்பு 1 கப், கடலைப்பருப்பு 1 கப், பாசிப்பருப்பு 1 கப், உளுந்து 1ஸ்பூன், சிறிதளவு சோம்பு, பெருங்காயம், மிளகாய் வற்றல், வெங்காயம், கறிவேப்பிலை, கொத்தமல்லித்தழை, உப்பு – தேவையான அளவு.

**செய்முறை :–**

நாட்டுச்சோளத்துடன் பருப்புவகைகளை இரண்டு மணிநேரம் ஊறவைத்து மிளகாய், சோம்பு, பெருங்காயம், உப்பு சேர்த்துச் சற்றுக்கரகரப்பாக அரைக்கவும். சின்ன வெங்காயம், கொத்தமல்லி, கறிவேப்பிலை இவைகளை பொடிப்படியாக நறுக்கி அரைத்த மாவுடன் கலந்து நான்ஸ்டிக் தோசைக் கல்லில் அடையாக ஊற்றியெடுக்கவும்.

❖❖❖❖❖

# சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

**31–07–2011** அன்று நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு பரிசு பெற்றவர்களின் பட்டியல்

| வ.எண். | விளையாட்டின் பெயர் | பரிசு பெற்றோர் I & II & III பரிசு | |
|---|---|---|---|
| 24 | Ball Throw (Girls) III & IV Std. | I | ஐஸ்வர்யா |
| | | II | சூர்யா |
| | | III | கார்த்திகா |
| 25 | Ball Throw (Girls) V & VI Std. | I | அபர்ணா |
| | | II | கீர்த்தனா |
| | | III | ஸ்ரீ அபிதா |
| 26 | Ball Throw (Girls) VII & VIII Std. | I | நர்மதா பரிதா |
| | | II | உமாமகேஸ்வரி |
| | | III | தாழினி சதாசிவம் |
| 27 | Ball Throw (Girls) IX & X Std. | I | ஞான தீவீகா |
| | | II | வினிதா |
| | | III | சொருபா ஈஸ்வரன் |
| 28 | Ball Throw (Girls) 16 to 20 years | I | ஆர். செல்ல கிருத்திகா |
| | | II | யுவஸ்ரீ |
| | | III | பத்மபிரியா |
| 29 | Ball Throw (Girls) 21 to 30 years | I | ரோகினி |
| | | II | ஜோதி |
| | | III | இந்துமதி |
| 30 | Ball Throw (Women) 31 to 40 years | I | பிருந்தா |
| | | II | சீதா |
| | | III | சாவித்திரி |
| 31 | Ball Throw (Women) 41 to 50 years | I | கே. வசந்தி |
| | | II | கலைச்செல்வி |
| | | III | கே. ஜெயமணி |
| 32 | Ball Throw (Women) 51 to 60 years | I | மல்லிகா |
| | | II | சரோஜா |
| | | III | தமயேந்தி |
| 33 | Ball Throw (Women) 61 and above | I | எஸ். சரோஜா |
| | | II | உத்தமி பொன்னுசாமி |
| | | III | பார்வதி |
| 34 | Lucky Corner (Ladies) above 18 years | I | கல்பனா ராஜா |
| | | II | பிரிந்தா |
| | | III | இந்துமதி |
| 35 | Running Race (Girls) 25 Metres | I | தாரிகா |
| | | II | ஹெரினி |

| | | | |
|---|---|---|---|
| | LKG & UKG | III | தன்வி |
| | | IV | கீர்த்தனா |
| | | V | சுகிர்தர் |
| 36 | Running Race (Girls) | I | சஞ்சுத்தா ராஜா |
| | 25 Metres | II | அனுசா மயில்வாகனன் |
| | I & IInd Std | III | லட்சிதா சுந்தர் |
| | | IV | நிகிதா ராஜா |
| | | V | மிதுலா திவ்ய பிரகாஷ் |
| 37 | Running Race (Girls) | I | ஐஸ்வரியா இளமுருகன் |
| | 50 Metres | II | கொற்றவைசிவை சரவணன் |
| | III & IV Std | III | இலக்கியா செல்வராஜ் |
| 38 | Running Race (Girls) | I | லத்திகா மோகன்ராஜ் |
| | 50 Metres | II | கீர்த்தனா குமார் |
| | V & VI Std | III | அபர்னா முத்துகுமார் |
| 39 | Running Race (Girls) | I | நர்மதா பீரித்தம் |
| | 75 Metres | II | தர்ஷினி சதாசிவன் |
| | VII & VIII Std | III | நிமிதா நவிக்குமார் |
| 40 | Running Race (Girls) | I | வினிஷா |
| | 75 Metres | II | ஹரிணி |
| | XI & X Std | III | நிலாமாதரி |
| 40 | Running Race (Girls) | I | எம்.வி. வாஷரி |
| | 100 Metres | II | எஸ். பத்மபிரியா |
| | 16 & 20 years | III | ஆர்.செல்லகிருத்திகா |
| 41 | Running Race (Girls) | I | ரோஷினி |
| | 100 Metres | II | சத்யபிரியா |
| | 21 & 30 years | III | வி. தீபா |
| 42 | Running Race (Women) | I | சாவித்திரி |
| | 100 Metres | II | வசந்தி |
| | 31 & 40 years | III | கர்பகப்பிரியா |
| 43 | Running Race (Women) | I | சுமதி கிருஷ்ணமூர்த்தி |
| | 100 Metres | II | எம். கோகிலா |
| | 41 to 50 years | III | கே. ஜெயமனி |
| 44 | Running Race (Women) | I | பி. மல்லிகா |
| | 100 Metres | II | எஸ். செல்வரானி |
| | 51 to 60 years | III | எஸ். லஷ்மி |
| 45 | Running Race (Women) | I | எஸ். சரோஜா |
| | 100 Metres | II | உத்தமி பொன்னுசாமி |
| | 61 and above | III | எஸ். ஈஸ்வரி |

❖❖❖❖❖❖

# பூமியதிர்வும் படைத்தவனும்

மிகமிகப் கோரமான பூமியதிர்வும்
மிக்குயர்ந்த கடலலைகள் ஆர்ப்பரிப்பும்
எரிமலைகள் வீசியெறியும்
அக்கினக் குழம்பின் வெள்ளமும்
விஞ்ஞான முதிர்வில் அமைத்து
எஞ்ஞான்றும் நம்மையே நாடியடைந்த
அணுமின் உலைகள் கொதித்துச் சிதறி
விண்ணுயர விஷக் காற்றலைகள் வீசிட
எரிதழலில் சிக்குண்டு கடல்
அலைகள் சீறித் துரத்திவர
மக்கள் வீடிழந்து உயிர்பிழைத்து
மாக்களென வீதிகளில் அலை மோதினர்.
அதிர்கின்ற பூமியும்
வெடிக்கின்ற தரைகளுமாய்
வீடுகளும் வானுயரக் கட்டிடங்களும்
வாகனங்களும் சுழன்றுட
நெருப்பின் வன்மை தகித்திருக்க
நீரின் அலைகள் இழுத்தோடினவாம்
ஆயிரமாயிரம் மானிடர் மாளவும் பலர்
அங்கங்கள் இழந்து தவித்திடவும்
அங்கையில் தவழ் மழலைகள்
எங்கனும் அனாதைகளாய் சிதறியோடினர்
பெற்றோரை அவரிழந்து தேடியழுது
குற்றுயிரும் குறையுடலுமாகத் திரிந்தனர்.
கூக்குரல் மேவிய இடிபாடுகளில்
குனிந்தெடுத்தனர் உடல்களை மிகுந்தோர்.
இங்ஙனம் தாங்கொணா துயரத்திலிருக்க
அங்கு வாழ் மக்கள் செய்த மாபாவமென்ன ?
கருணைக் கடலான அருள்மிகு
கடவுள் அவ்விடம் விட்டகன்று
அங்கு நடப்பதொன்றும் அறியாமல்
எங்கு மறைந்து ஒளிந்து கொண்டார் ?
மாசி மகத்திற்கு கங்கையில் நீராட
மெல்ல அரித்துவாரம் சென்று விட்டாரா ?
பூமிக்குத் தானளித்த கொடுமைக்கு
பூகம்ப மரணங்களுக்கு
செய்திடும் ஒரு பரிகாரமாய்
மெய்சிலிர்க்க கும்பமேளாவில்
அன்று கங்கையில் முழுகி எழுந்தாரா ?
அவ்வாறாயின் சரியே
அங்கு கோடி கோடியாய் மக்கள்
கங்கை நதிக்கரையில் குவிந்திருக்க
மிதிபாடுகளில் சிக்குண்டு மிதிபட்டு
மக்கள் திணறி மடியாமலிருக்க
தான் அங்கிருந்த காரணத்தால்
தடுத்தாட் கொண்டாரா இறைவன் ?
அணு உலைகள் பூகம்ப அதிர்ச்சியினால்
உடைப்பெடுத்து விஷத்தினை பரவவிட
அணுகி சீர் செய்ய விஞ்ஞானிகள்
துணிந்து செய்த உயிர்த்தியாகம்
இறைவனது முன்னாள்
கருணைக்கு சமமானதா ? உயர்வானதா ?
துயர்கடலில் மூழ்கி வாழும் மக்களுக்கு
குளிருக்கு இதமான கம்பளியாகவும்
பசிக்கும் சிறிது உணவாகவும்
தங்குவதற்கு நிழல் கூரையாகவும்
அருள் செய்து அவர்
மருள் நீக்கி புதுவாழ்வு காண
யாரே உதவிடுவார்
அவரே வணங்கும் தெய்வமாவார்.
அப்போது சூரிய கிரணம்
அணுகிவர இருள் சூழ்ந்தது
தங்கத் தாம்பாளமான சூரியன்
மங்கி ஒளியிழந்தது
நாணம் மிகக் கொண்ட ஒருவர்
தான் செய்த மாபெரும் பிழையினுக்கு
துன்புற்று முகம் மறைந்தார் போலும்
என்று மக்கள் கூறினராம்.
இவையொரு நாஸ்திகர் பகன்றமொழி
நானிதற்குப் பொறுப்பல்ல அறியவும்.

கவிஞர் மனோன்மணி மாணிக்கவாசகம்.

❖❖❖❖❖

## கட்டுரை

### ஒன்றாய் இருங்கள் உயர்வினை எண்ணுங்கள்

– ர.நிமிதா

**முன்னுரை :**

தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

என்பது வள்ளுவரின் மாணிக்க வாசகம். ஒருவர் வாழ்ந்தால் சிறப்புடையவனாய் வாழ்தல் வேண்டும். இல்லையெனில் இறத்தலே மேலானது என்று இதன் பொருள். மனிதன் வாழும் போது தன் எண்ணத்தை ஒன்றுபட்ட உள்ளத்துடன் எண்ண வேண்டும்.

**வேறுபாடில்லா வாழ்வு:**

மனிதன் வாழும் போது உயர்ந்தோர் தாழ்தோர் என்று வேறுபாடில்லாமல் வாழ வேண்டும். காக்கா குருவி எங்கள் ஜாதி என்று பாடிய பாரதியார் தன் வாழ்வின் இடர்கள் பல வந்தாலும் பிறரிடம் அன்பு வைப்பதில் குரங்கு, குருவி போன்ற உயிரினங்களின் மீது காதல் கொண்டு வாழ்ந்தார். இது போன்ற மனிதன் வாழ்ந்த காலத்தில் நீர் அருந்துவதற்கு நிறம் பார்த்தும் தரம் பார்த்தும் இருக்கின்றன.

**எண்ணத்தின் புகழ்:**

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்

என்பது வள்ளுவர் வாக்கு. பிறர்க்கு உதவி செய்தால் நமக்கும் நன்மை பயக்கும் என்பதே இதன் பொருள். என்ன விதைக்கிறோமோ அது தான் முளைக்கும். எல்லோரும் ஓர் குலம் எல்லோரும், ஓர் மக்கள் என்ற எண்ணம் எழ வேண்டும்.

**ஒற்றுமையில் வலிமை:**

உன் எண்ணத்தை ஒன்று படுத்தினால்
எதிரிகள் சிதறிவிடுவர்.

என்பது விவேகானந்தரின் மாணிக்கச் செயல்பாடுகள். நாம் ஒற்றுமையுடன் இருந்தால் நம் நாட்டுக்குள் எதிரிகள் அல்ல, எறும்புகள் கூட நுழைய முடியாது. நம் நாட்டில் பறவையாய் பிறந்தாலும் யாருக்கும் எந்த விதத் துன்பமும் கொடுக்காமல் சுதந்திரமாய் இருக்க வேண்டும்.

**மனித நேயம்:**

ஒருவருக்கு ஒரு பொருளை முடிந்தவரை கொடுத்து உதவுவதே நல்லதாகும். நாம் கொடுப்பது நன்மை பயக்கும்.

**முடிவுரை:**

மனிதன் ஒன்றாய் இருந்து ஒற்றுமையாய் செயல்பட உயர்வை அடையலாம். பாரதியார், காமராசர் போன்ற முன்னோடிகளின் எண்ணம் நம் மனதில் தோன்ற வேண்டும். அப்படித் தோன்றினால் உயர்வினை எண்ணலாம்.

❖❖❖❖❖

# திருமணங்களில் திருவிளையாடல்கள்

– செ.நல்லசாமி

திருமணங்களில் நாம் செய்யும் செலவுகளுக்கும், ஆர்ப்பாட்டங்களுக்கும், ஆடம்பரங்களுக்கும், ஆரவாரங்களுக்கும் அளவே இல்லை. இவை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. இந்த விழா பல குடும்பங்களின் ஓட்டு மொத்தச் சேமிப்பை விழுங்கும் முதலையாக உள்ளது. பாடுபட்டுச் சேர்த்த செல்வம் இந்த ஒரு நாள் கூத்தில் கரைந்து விடுகிறது. இதில் இருப்பவர்களை விட இல்லாதவர்கள் கடன் வாங்கி நடத்தும் கல்யாணங்களில் வாரியிறைப்பது கூடுதலாகவே இருக்கின்றது. இவர்கள் சீட்டு என்ற பெயரில் சொந்தங்களையும். பந்தங்களையும் வசமாகச் சிக்க வைத்து விடுவதும் நடக்கும். ஒரு சில இடங்களில் பணம் படைத்வர்களும் இவர்களிடம் தோற்றுப் போவது கூட உண்டு.

'விரலுக்கேற்ற வீக்கம்' என்றில்லாமல் கடன் வாங்கி கல்யாணத்தை விமர்சையாக நடத்துவார்கள். காலப்போக்கில் கடனை அடைக்க முடியாமல் காடு தோட்டத்தை இழந்து கஞ்சிக்கே வழியில்லாமல் திண்டாடுவார்கள். இவ்வாறாகப் பெரிய குடும்பங்கள் பெருங்காய டப்பாவாகிப் போனதும் உண்டு.

இன்று திருமணத் தகவல் மையங்களின் எண்ணிக்கை வெகுவாகப் பெருகி விட்டன. இருந்த போதிலும் அவ்வளவு எளிதாகத் திருமணங்கள் கூடி விடுவதில்லை. மணமக்களின் ஜாதகங்கள் பெரும் அளவில் ஜெராக்ஸ் நகல்கள் எடுக்கப்பட்டு, பரவலாகப் பல மையங்களுக்கு அனுப்பப்படுவதையே எங்கும் காண முடிகிறது. ஒரு சிலர் அச்சடித்து அதிக அளவில் விநியோகிப்பதும் உண்டு.

உற்ற நண்பர்களும், உறவினர்களும் தாங்களாகவே முன்வந்து செய்து வந்த தானாவதிச் சேவையை இன்று தகவல் மையங்களும், திருமண அமைப்பாளர்களும் வணிக நோக்கில் செய்து வருகின்றனர். அன்று மாட்டுச் சந்தைக்குள் இருந்து வந்த தரகு இன்று மனித உறவுக்குள்ளும் நுழைந்து விட்டது. 'நமக்கேன் வம்பு என்று சொல்லிச் சொந்தங்களும், பந்தங்களும் ஒதுங்கி விட்டனர். ஆகவே, 'சுயம்வரங்கள்' நடத்தி மணம் முடிக்கும் அளவுக்கு நிலைமை மோசமாகப் போய்விட்டது. சொந்தங்களும் பந்தங்களும் தேவையில்லை என்றாகி விட்டது. மொத்தத்தில் வாழ்க்கையே ஒரு வாணிபப் பொருளாகி விட்டது. 'வரதட்சணை வாங்குவதும் குற்றம், கொடுப்பதும் குற்றம்' எனக் கூறும் சட்டம் நடை முறையில் பொருளற்றதாகவே போய் விட்டது.

ஆயிரக்கணக்கில் அதிக விலையில் நிச்சயதார்த்தத்திற்கும், திருமணத்திற்கும், அழைப்பிதழ்கள் அச்சடிக்கப்படுவது இன்றைய நடைமுறை நாகரிகமாகி விட்டது. அழைப்பிதழ்கள் அறிமுகம் இல்லாதவர்களுக்கும் தாராளமாக வழங்கப்படுவது உண்டு. பஸ்,

ரயில் பயணங்களின் போது பார்த்து அறிமுகம் ஆகின்றவர்களுக்கும் கூட இவற்றை நீட்டுவதைப் பார்க்கலாம். நகரத்து நகைக்கடைக்காரர் முதல் நடைபாதை வியாபாரி வரை எல்லோருக்கும் இவை வாரி வழங்கப்படுகின்றன. நெருக்கமான நண்பர்கள் மற்றும் உறவினர்களின் கைகளில் திணிக்கப்பட்டு அவர்களுக்கு வேண்டியவர்களையும் அழைக்கக் கோருவதும் உண்டு.

'கல்யாண மண்டப வளாகத்திற்குள் இவர் கால் வைத்தாலே போதும், தனக்குக் கௌரவம் வந்து விடும் ' எனக் கருதி அறிமுகம் இல்லாத பெரும்புள்ளிகளை அழைக்கும் பொருட்டு அவர்களுக்கு அறிமுகம் ஆனவர்களை அழைத்துப் போய், தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டு அழைப்பிதழைக் கும்பிட்டுக் கொடுப்பவர்களையும்கூட காண முடிகிறது.

ஒரே நேரத்தில் இரண்டு நிகழ்ச்சிகளுக்கான அழைப்பிதழ்களை இணைத்துக் கொடுப்பவர்களும் இருக்கின்றனர். அவற்றில் ஒன்று நிச்சயதார்த்த அழைப்பு, மற்றொன்று திருமண அழைப்பு. இரு தரப்பினரும் ஓரிடத்தில் கூடிக் கலந்து பேசி, கொடுக்கல், வாங்கல் பற்றி முடிவு செய்து, மணநாளையும், மண மண்டபத்தையும், திருமணத்தையும் உறுதி செய்வது தான் நிச்சயதார்த்தம். இதற்காகவே இந்த நடைமுறை தொன்று தொட்டு இருந்து வருகின்றது.

வாங்குவதையும், கொடுப்பதையும் தாங்களே முடிவு செய்து, வரதட்சணையையும் நிர்ணயம் செய்து, மண மண்டபத்திற்கும் முன் பணம் செலுத்தி, திருமண அழைப்பிதழ்களையும் அச்சிட்டு அதற்கும் பின்பு சுற்றத்தாருக்கும் நண்பர்களுக்கும் நிச்சயதார்த்த அழைப்பிதழ் கொடுப்பதில் என்ன நியாயம் இருக்கின்றது ? வரும் காலத்தில் வளைகாப்பு அழைப்பிதழையும் சேர்த்துக் கொடுக்கும் நிலை வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

நகரத்தில் உள்ள பெரிய திருமண மண்டபத்தில் திருமணத்தை வெகு விமர்சையாக நடத்துவதையே இன்று பெரும்பாலானோர் விரும்புகின்றனர். இதற்காக ஆடம்பரத் திருமண மண்டபங்கள் நகரங்கள் தோறும் கட்டப்பட்டு உள்ளன. அவற்றில் குளிர்சாதன வசதி கொண்டவைகளும் உண்டு. அதுவும் ஆறு, ஏழு மாதங்களுக்கு முன்பே முன்பதிவு செய்து கொள்ள வேண்டும். உரிய மண்டபம் கிடைக்காமல் போனால் திருமணம் மாதக் கணக்கில் தள்ளிப் போவதும் உண்டு. ஒரு குறிப்பிட்ட மண்டபத்தில் தான் திருமணம் நடக்க வேண்டுமென அடம் பிடிக்கும் மணமக்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

வந்திருக்கும் விருந்தாளிகள் மணமண்டபத்தில் படுத்துத் தூங்கினால் அது மணவீட்டார்களுக்கு மரியாதைக் குறைவு என்ற நோக்கில் நகரில் உள்ள தங்கும் விடுதிகளில் ஒதுக்கீடு (Reserve) செய்து தங்க வைத்து உபசரிக்க வேண்டிய பொறுப்பையும் சுமத்தி விடுகிறார்கள். தொடரும்....

❖❖❖❖❖

# கொங்கு திருமணமாலை

திருமணத்தகவல் மையம், சென்னை.

திருமணத்திற்குத் தயாராக உள்ள கொங்கு வேளாண் குடியைச் சேர்ந்த – IAS; IPS; IAAS; IFS; பட்டம் பெற்றுப் பணியில் உள்ள வரன்கள் தங்கள் தேவைக்கு கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

**மணமகள் தேவை :–**

கண்ணன் கூட்டம் –வயது – 37, படிப்பு – B.Sc MPG; LLB; சென்னையில் குடியிருப்பு கட்டுமானத் தொழில் – பூர்வீகம் – திருச்செங்கோடு வட்டம் – தந்தை சென்னையில் ஏற்றுமதி தொழில் – பூராட நட்சத்திரம் – செவ்வாய் இல்லை – உயரம் – 6அடி,சிவப்பு, 1 தம்பி உண்டு, தகுதியான படித்த பெண் தேவை.

தொடர்புக்கு

**டி.கே. சுப்பிரமணியன்,**

60 – மேகசின் சாலை, பட்ரோடு, பரங்கிமலை, சென்னை – 600 016.

தொலைபேசி: 044–22311411, 9840364348

## மணமகள் தேவை

| | | |
|---|---|---|
| ஜாதகர் பெயர் | : | பி.கோகுலகிருஷ்ணன் |
| பிறந்த தேதி | : | 22–09–1981 செவ்வாய் |
| பிறந்த நேரம், இடம் | : | 14.19 IST, ஈரோடு |
| நட்சத்திரம் | : | புரசம் பூசம் (பாதம் 2), ராசி : மிதுனம், லக்கனம் : மகரம் |
| தந்தை பெயர் | : | கே.என்.பாலசுப்பிரமணியன் |
| தாயார் பெயர் | : | திலகவதி |
| தந்தை தொழில் | : | Textile Export Business |
| உடன் பிறப்பு | : | 1 அக்கா டாக்டர், ஆஸ்திரேலியா, திருமணமானவர்; மாப்பிள்ளை – டாக்டர் |
| கல்வி | : | M.Sc., International Business, London, (UK), MA., (Marketing) (UK) |
| தொழில் | : | Own Textile Export Business, Karur |
| வருவாய் | : | மாதம் சுமார் Rs. 1,00,000/- |
| உயரம் / நிறம் | : | 5.6 அடி, நல்லசிவப்பு |
| குலம் / கோவில் | : | பெருங்குடி குலம், புலியூர் ஸ்ரீ முச்சிலியம்மன் |
| சொத்து | : | பங்களா, பூமி, வங்கி வைப்பு நிதி – முதலியன ரூ. 10 கோடி |

| | | | |
|---|---|---|---|
| | | | சந் |
| | இராசி | | செ ரா |
| லக் கே | | | |
| | | புத சுக் | சூரி குரு, சனி |

| | | | |
|---|---|---|---|
| சுக் | | சந் | சனி |
| சூரி கே | நவாம்சம் | | குரு |
| லக் | | | ரா |
| செ | | புத | |

போன் : 98430 79736 (தந்தை), 9047034549 (தாய்)